# உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் குறித்து ஓர் ஆய்வு

**தி. ரேணுகாதேவி**
*ஆய்வு மாணவர், மதுரை காமராசர் பல்பலைக்கழகம், மதுரை*

**ஆய்வு சுருக்கம்**

*“உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் குறித்து ஓர் ஆய்வு” என்னும் தலைப்பில் ஆங்கில வழிக்கல்வி பயிலும் மாணவர்களிடம் மொழித்திறனில் எழுதுதல் நிலையில் அதிக பிழைகள் காணப்படுகின்றன. மாணவர்களின் எழத்திறனில் ஏற்படும் பிழைகளை களைய சில கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தி எழுதுதல் திறனில் மேன்மையடையச் செய்யலாம். இவ்வாய்வில் ஆங்கில வழிக்கல்வி பயிலும் 40 உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசோதனை வகை ஆய்வுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வாய்வின் முடிவில் மரபு வழிக்கற்றல் முறையில் மாணவர்களின் மொழித்திறனில் பிழைகள் சற்று அதிமாக காணப்படுகின்றன. காட்சிக்கேள்வி வழிக்கற்றல் முறையில் மொழித்திறனில் பிழைகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது. இதற்கு காரணம் கற்பித்தல் முறையில் உள்ள மாற்றம் தான். காட்சி கேள்வித்துணைக்கருவிகளின் மூலம் பாடம் கற்பிக்கும் போது மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கற்றலில் ஈடுபடுகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.*

**ஆய்வுக்குரிய சிக்கல்**

இன்றைய கால கட்டத்தில் ஆங்கில மொழியின் தாக்கத்தால் தமிழ் மொழியின் வளர்ச்சியில் பின்னடைவு அதிகம் காணப்படுகிறது. மொமித்திறன் நிலையில் மாணவர்கள் எழுத்திறன் மிகவும் குறைவாக உள்ளது. எழுதுதல் நிலையில் அதிக பிழைகள் காணப்படுகின்றன. இதற்கு காரணங்கள் பல உள்ளன அதாவது ஆங்கில வழிக்கல்வி , வட்டார மொழி , கொச்சை சொற்கள், குடும்பத்தில் பயன்படுத்தும் தாய் மொழி போன்றவை தமிழ் மொழித்திறன் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன. மாணவர்களின் எழத்திறனில் ஏற்படும் பிழைகளை களைய சில கற்பித்தல் நுட்பங்களை பயனபடுத்தி எழுதுதல் திறனில் மேன்மையடையச் செய்யலாம்.

**ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும்**

பெரும்பான்மையாக எழுதும் போது தான் அதிகமாக பிழைகள் ஏற்படுகின்றன. இலக்கணத்தில் ஒற்றுப்பிழை என்று சொல்லப்படும் சந்திப்பிழைகள். எங்கே‘க்’ போடவேண்டும், எங்கே போடக்கூடாது என்பதறியாமலேயே பலரும் பட்டறிவால் ஓரளவுக்குச் சரியாகவே போட்டுவடுகிறோம். ஒற்று மிகுத்து ஒலிக்கவேண்டிய இடத்தில் ஒற்றுமிகுத்தும். ஒற்றுமிகுத்துக் கூறாமல் இயல்பாக ஒலிக்க வேண்டிய இடங்களில் இயல்பாக ஒலித்தும், எழுதியும் வந்தால் தான் தமிழ் இனிமையுடைய மொழியாக இருக்கும். இல்லையேல், ஓசை இனிமை குன்றுவதுடன் பொருட்பிழையும் நிகழும்.

இரு சொற்கள் சேரும் போது, இரண்டாவது சொல்லின் முதலெழுத்து க் ச் த் ப் முதலிய நான்கு மெய்யெழுத்துக்களாக இருப்பின் நடுவிலே க் ச் த் ப் ஆகிய வல்லின மெய்யெழுத்துக்கள் சில விதிகளின் படி, சில சொற்களில் மட்டும் நடுவில் சேரும். இதனை வல்லெழத்து மிகுதல் என்கிறோம். தேர்வுகளிலும், கட்டுரைகளிலும் மாணவர்களுக்கு மதிப்பெண்கள் குறைவதற்கு முக்கிய காரணம் வல்லெழுத்து மிகும்,மிகா இடங்களை அறியாமையே. சாதாரணமாக தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய விதிகளையாவது தெரிந்திருத்தல் அவசியமாகும்.அவ்விதிகளை வெறும் வாய்மொழியாக கற்றுக்கொடுப்பதை விட தகவல் தொழில்நுட்பக்கருவிகள் கொண்டு கற்பித்தால் மாணவர்களுக்கு எளிதில் புரியும்,கற்றுக்கொண்ட பாடக்கருத்துக்கள் நீண்ட நாட்கள் நினைவில் இருக்கும்.

**மொழித்திறனில் ஏற்படும் முக்கியமான பிழைகள் பின் வருவன**

1. ஒற்றுப்பிழைகள்
2. குறில் நெடில் பிழைகள்
3. மயங்கொலிப்பிழைகள்
4. துணையெழுத்துப்பிழைகள்
5. ஒருமைப்பன்மை பிழைகள்
6. மெய்மயக்கச்செற்கள் ஏற்படும் பிழைகள்
7. சேர்த்தெழுதுதலில் ஏற்படும் பிழைகள்

வார்த்தைகளையும் வாக்கியங்களையும் சரியாக உச்சரிக்கும் மாணவர்கள் எழுத்துக்களை தனியாக உச்சரிக்கும் போது பெரும்பாலான மாணவர்களுக்கு குறில்நெடில் தெளிவு இல்லை.இதன் காரணமாகவே தமிழில் எழுத்துப்பிழைகள் அதிமாக ஏற்படுகிறது. இப்பிழைகளை ஒலி-ஒளி சாதனங்களை பயன்படுத்தி ஆசிரியர் கற்பிக்கலாம்.

ஆங்கில வழிக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நாம் தாய்மொழியினை தவறுகள் இல்லாமல் படிப்பதற்கும் எழுதுவதற்கும் மாணவர்களை தயார்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் .எனவே மாணவர்களுக்கு காட்சிக்கேள்வி துணைக்கருவிகளை பயன்படுத்தி கற்பித்தல் அவசியமான ஒன்றாகும்.

**ஆய்வுத்தலைப்பு**

“உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் குறித்து ஓர் ஆய்வு”

**ஆய்வின் குறிக்கோள்கள்**

1. காட்சிக்கேள்வி துணைக்கருவிகள் மூலம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளை களைதல்
2. கட்டுப்பாட்டுக் குழு மற்றும் பரிசோதனைக்குழுவின் முன் சோதனை மற்றும் பின் சோதனையின் ஆதாய மதிப்பெண்களை மதிப்பிடுதல்.

**கருதுகோள்கள்**

1. மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளில் முன் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் பின் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை.
2. மரபு வழிக்கற்றல் மற்றும் காட்சிக்கேள்வி வழிக்கற்றல் முறையில் ஆதாய விகிதத்தில் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை.

**மாதிரிக்கூறின் அளவு –தெரிவு முறை**

நோக்குடைய மாதிரிக்கூறு (purposive sampling) என்பது தரப்பகுப்பாய்வு முறையில் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றது. நோக்குடைய மாதிரிக்கூறின் மூலம் எடுக்கப்படும் மாதிரிக்கூறுகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவும், புரிந்துகொள்வதும் எளிது. ஆய்வாளர் தாம் ஊகிதம் ஆய்வின் முடிவிற்கேற்ப முழுமைத்தொகுதியில் இருந்து சில உறுப்புகளை மட்டும் மாதிரிக்கூறாக தேர்வு செய்து கொள்வதாகும்.

இவ்வாய்விற்கு தியாகராசர் நன்முறை மேன்நிலைப்பள்ளி ஏழாம் வகுப்பு 40 மாணவர்கள் மாதிரிக்கூறாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**ஆய்வுக்கருவிகள்**

வினாநிரல் மூலமாக ஆய்வு பிரச்சனைக் குறித்த வினாவிற்கு விடை கண்டறிதல்.

**ஆய்வுக்கருவி பற்றிய விளக்கம்**

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேரடி வினாநிரலில் உள்ள வினாக்கள் அனைத்தும் ஏற்புடைமை மற்றும் நம்பகத்தன்மை ஆராயப்பட்டு இத்துறை வல்லுநர்களிடம் கொடுத்து சரிபார்த்த பின்னரே நேரடி வினாநிரல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்

**செயல்படுத்தும் முறை – புள்ளிவிவரம் திரட்டும் முறை**

இவ்வாய்விற்கு தியாகராசர் நன்முறை மேன்நிலைப்பள்ளி ஏழாம் வகுப்பு 40 மாணவர்கள் மாதிரிகளாக தேர்வு செய்து பரிசேதனை வகை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கட்டுப்பாட்டுக்குழு - முன் சோதனை – மரபுவழிக்கற்றல் - பின் சோதனை**

**பரிசோதனைக் குழு - முன் சோதனை - காட்சிக்கேள்வி துணைக்கருவிகள் மூலம் கற்பித்தல் - பின் சோதனை**

ஆதாய மதிப்பெண்களைப் புள்ளியியல் முறையில் ஒப்பிடல்.

**புள்ளி விவரங்களை ஆய்வு செய்ய உள்ள முறைகள்**

சராசரி ,திட்ட விலக்கம்.“t” test ஆகியவற்றை கண்டறிதல்.

**பகுப்பாய்வு**

பெறப்பட்ட தரவுகள் கணக்கிடப்பட்டு பகுத்தாய்வுக்கு உட்படுத்தப்பட்டு கீழ்கண்ட அட்டவணை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

**கட்டுப்பாட்டுக் குழு மற்றும் பரிசோதனைக் குழுவின் ஆதாய மதிப்பெண்**

| மாதிரிகள் | மாதரிக்கூறு | சராசரி | திட்டவிலக்கம் | ‘t’ | குறிப்புச்சொல் |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பாட்டுக் குழு | 20 | 3.55 | 1.32 | 6.27 | குறிப்பிடத்தக்க |
| பரிசோதனைக் குழு | 20 | 12.15 | 1.73 | | |

மேற்கண்ட அட்டவணையின் படி ‘t’ மதிப்பானது அட்டவணை மதிப்பை விட அதிகமாக உள்ளது. எனவே மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளில் முன் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் பின் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்ற கருதுகோள் நிராகரிக்கப்படுகிறது. மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் முன் சோதனைக்கும் பின் சோதனைக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது.

மரபு வழிக்கற்பித்தலை விட காட்சிக்கேள்வி துணைக்கருவிகள் மூலம் கற்பித்தலில் மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளின் அளவு குறைந்து காணப்படுகிறது. படிப்பில் மாணவர்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2**

**கட்டுப்பாட்டுக் குழு மற்றும் பரிசோதனைக் குழுவின் ஆதாய விகிதம்**

| மாதிரிகள் | மாதரிக்கூறு | சுராசரி | திட்டவிலக்கம் | ‘t’ | குறிப்புச்சொல் |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பாட்டுக் குழு | 20 | 20.40 | 6.62 | 2.06 | குறிப்பிடத்தக்க |
| பரிசோதனைக் குழு | 20 | 70.81 | 12.65 | | |

மேற்கண்ட அட்டவணையின் படி ‘t’ மதிப்பானது அட்டவணை மதிப்பை விட அதிகமாக உள்ளது. எனவே மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளில் கட்டுப்பாட்டுக் குழுவின் ஆதாய விகிதத்திற்கும் பரிசோதனைக் குழுவின் ஆதாய விகிதத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்ற கருதுகோள்

நிராகரிக்கப்படுகிறது. மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் பரிசோதனைக்குழு இடையே வேறுபாடு காணப்படுகிறது.

மரபு வழிக்கற்பித்தலை விட காட்சிக்கேள்வி துணைக்கருவிகள் மூலம் கற்பித்தலில் மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளின் அளவு குறைந்து காணப்படுகிறது. படிப்பில் மாணவர்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**ஆய்வு முடிவு**

மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளில் முன் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் பின் சோதனையின் ஆதாய மதிப்பெண்ணிற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது.

மரபு வழிக்கற்றல் மற்றும் காட்சிக்கேள்வி வழிக்கற்றல் முறையில் மொழித்திறனில் ஏற்படும் பிழைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது.

**ஆய்வின் கல்வித்தாக்கம்**

1. தமிழ் ஆசிரியர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி கட்டாயம் தேவை.
2. மரபுவழிக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பித்தல் துணைக்கருவிகளைக் கொண்டு மொழிப்பாடத்தினை கற்பிக்க வேண்டும்.
3. தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி கற்பிக்கும் போது மாணவர்களின் கற்றல் அடைவ அதிகரிக்கும்.
4. மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்கும்

**முடிவுரை**

உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் என்னும் இவ்வாய்வின் முடிவில் மரபு வழிக்கற்றல் முறையில் மாணவர்களின் மொழித்திறனில் பிழைகள் சற்று அதிமாக காணப்படுகின்றன. காட்சிக்கேள்வி வழிக்கற்றல் முறையில் மொழித்திறனில் பிழைகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது. இதற்கு காரணம் கற்பித்தல் முறையில் உள்ள மாற்றம் தான்.காட்சி கேள்வித்துணைக் கருவிகளின் மூலம் பாடம் கற்பிக்கும் போது மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கற்றலில் ஈடுபடுகின்றனர். கற்ற பாடங்களும் நீண்ட நாட்கள் நினைவில் இருக்கின்றன. கற்பித்தலில் புதுபுது முறைகளை பின்பற்றுவதன் மூலம் மொழித்திறனில் ஏற்படும் பிழைகள் மட்டுமில்லாது அவர்களுடைய அடைவுத்திறனையும் மேன்மையடையச் செய்ய முடியும்.

**ஆய்வாளர் பயன்படுத்தவுள்ள நூல்கள், இதழ்கள், ஆய்வுக்கட்டுரைகள்**

ஏழாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் பாடநூல்